பச்சை குழந்தைகளையும் பட்டினிபோட்டு கொல்லும் நிலை

பசிக்கொடுமை தாளாமல் பிள்ளையை விற்கும் தாய்

(:0:)

தமிழ்நாடெங்கும் பட்டினிப் படை ஊர்வலங்கள்

:0:

வறுமைக் கொடுமை வளருகிறது

சென்னை, டிச. 13—

நாட்டிலே பஞ்ச நிலை மிகப் பெருகி விட்டது. குழந்தைகளை விற்பதும், பட்டினியால் சாவதும், பெருகிவிட்டது. பச்சைக் குழந்தைகளைப் பட்டினி போடமுடியாமல் பெண் மக்கள் கள்ளச் சந்தைகளைத் தேடிச் சென்று அரிசி வாங்கிவரும் நிலைமை வந்துவிட்டது.

ஆனால் அதே சமயத்தில் நாட்டிலே விருந்துகள் கேளிக்கைகள் நடைபெறுவதையும் மக்கள் காண்கின்றனர். செல்வர்களின் வீடுகளில், சட்டசபை உறுப்பினர்கள், மந்திரிகள், அதிகாரிகளின் வீடுகளில் ரேஷன் திட்டப்படி 3 நாள் சாப்பிடக்கூடிய அரிசியும், மீதி நாள் பட்டினி கிடக்கும்படியான நிலைமையும்தான் இருக்கிறதாவென்னும் குமுறல் பொது மக்களிடையே வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டிலே நாளுக்கு நாள் வறுமைக் கொடுமை அதிகமாகி, பட்டினி நிலை வளர்ந்து வருகிறது. உணவுப்பொருள்கள் கிடைக்காத கொடுமை ஒருபுறமிருக்க, நெசவுத் தொழிலாளர்க்கு நூல் கிடைக்காமையால் வேலையின்றி வருவாயின்றிக் கிடப்பதே இந்தப் பட்டினித் தொல்லைக்குப் பெருங் காரணமாகும்.

சேலத்தில், மதுரையில், வேலூரில், திருநெல்வேலியில், ஆம்பூரில் பட்டினிப் படைகள் ஊர்வலம் என்று செய்திகள் கிடைக்கின்றன. இதை தவிர, பத்திரிகைக்குச் செய்தி எட்டவைக்க முடியா நிலையிலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் பட்டினி நிலைமை ஏற்பட்டு மக்கள் பெருந் துன்பத்தில் சிக்கிக் கிடக்கின்றனர்.

செங்கற்பட்டுக்கு அடுத்த ஓரத்தூரில் ராஜி என்பவன் வேலையில்லாமல் திரிந்து, வேலை தேடிச் சென்னைக்கு வந்திருந்த சமயத்தில், அவன் மனைவி, நாட் கணக்கில் பட்டினி கிடப்பதைச் சகிக்க முடியாமல், தன் ஒரே குழந்தையைக் கூடுவாஞ்சேரி கடைத் தெருவில் சிற்றுண்டிக் கடைக்காரொருவரிடம் ஐந்து ரூபாய்க்கு விற்றுவிட்டாள். பின் கணவன் ஊர் திரும்பியதும் செய்தியறிந்து, ஊர்ப் பஞ்சாயத்தாரின் உதவிமீது, மீண்டும் குழந்தையை அடைந்தனர்.

சென்னை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கள்ளத்தனமாக அரிசி கொண்டுவந்ததாகத் தனம்மாள் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அந்த அம்மாள், தான் வெளியூரிலிருந்து அரிசி வாங்கி வந்தது உண்மைதான் என்று கூறி, "அரசாங்கம் கொடுக்கிற ரேஷன் அரிசி 3 நாளைக்குத்தானே வருகிறதுமீதி 4 நாட்களுக்கும் பெரியவர்கள் தான் பட்டினி கிடக்க முடிகிறது, பச்சைக் குழந்தைகளையும் பட்டினி போட்டுக்கொல்ல மனம் வர

(3ம் பக்கம் பார்க்க)

Regd: No. M. 5458 Phone No. 4502:
விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2	சென்னை 14—12—50	மணி 12

ஏழைகள் கண்ணைத் துடைக்கும் வேலையா?

(o)

புலிகளுக்குப் புத்தி கூறுகிறார் தாண்டன்

தாமும் பொதுநலத்தில் பங்கெடுத்துக் கொண்டதாகப் பொதுமக்களுக்குக் காட்டும் விந்தை

சென்னை, டிச. 13—

காங்கிரஸ் மகாசபைத் தலைமைப் பீடத்தில் தாண்டன் அமர்ந்திருக்கிறாரல்லவா? நாடெங்கும் இலஞ்ச ஊழலும், பதுக்கலும், கள்ளச்சந்தையும் கேட்பாரற்ற முறையில் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

அதுவும், மத பக்தர்களாக, மகான்களின் சீடர்களாக தேசபக்தர்களாக, தியாகிகளாக பொதுமக்கள் முன்னே காட்சிதரும் பேர்வழிகளே இத்தகைய ஊழல்களில் தலைமை இடம் பெறுகின்றார்கள் எனவே, இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் வாய் மூடிக்கொண்டிருப்பதில் பயனில்லையென்றும், "வர்த்தகர்களே இலஞ்சம் கொடுக்காதீர்கள்; அதிகாரிகளே இலஞ்சம் வாங்காதீர்கள்! வணிகர்களே கொள்ளை இலாபமடிக்க முயலாதீர்கள்" என்று ஓர் அறிக்கை விட்டுவிட்டால், எங்காவது இரண்டொரு கூட்டங்களில் பேசிவிட்டால், தாமும் ஏதோ நாட்டுத் தொண்டு செய்ததாக ஆகிவிடும் என்று தாண்டன் கருதுகிறார்போலும்! ஏனெனில் பொதுத் தேர்தல் வருங்காலத்தில், இந்த அறிக்கையும் தம் பேச்சை வெளியிட்டிருக்கும் பத்திரிகைப் பிரதிகளும் பொது மக்களை ஏமாற்றப் பயன்படுமல்லவா?

உண்மையிலே தாண்டன் லஞ்ச ஊழலைப் போக்க வேண்டுமென்று விரும்பினால், கொள்ளை லாபத்தைத் தடை செய்ய வேண்டுமென்று விரும்பினால், அந்தப் பொறுப்பை மக்களிடமே ஒப்படைத்துவி[illegible] ஏற்பாடு செய்யலாமே. மக்க[illegible] கண்டுபிடித்துக் கூறும் ஊழல்களை உடனுக்குடன் கவனிக்காத அதிகாரிகளைத் தண்டிப்பது என்று சட்டம் செய்யலாமே. ஊழல்களைச் செய்தவர்கள் என்று நன்கு ஆதார பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்ட பின்னரும் அவர்களைப் பதவியில் வைத்[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

சர்க்கரை-வெல்லம் கிடைக்காவிடில் என்ன?

(o)

செத்தா போய்விடுவீர்கள்?

(o)

காங்கிரஸ் சபைத்தலைவர் கேட்கிறார்

பம்பாய், டிச. 13—

காங்கிரஸ் சபைத் தலைவர் பாபு புருஷோத்தம்தாஸ் தாண்டன், பம்பாயில் தம்மைச் சந்தித்துப் பேசிய தூதுக்கூட்டம் ஒன்றிற்குப் பதில் அளிக்கையில், "சர்க்கரையும் வெல்லமும் கிடைக்காமற் போனால், எவரும் செத்துப்போய் விடமாட்டார்கள். ஆகவே, அவற்றிற்குக் கண்ட்ரோல் தேவையில்லை. அவற்றின் விலை ஏறினாலும் நாட்டில் நெருக்கடி ஒன்றும் நேர்ந்து விடாது. காங்கிரஸ் கொள்கை வர்த்தக இனத்துக்குத் தீங்கு விளைவிப்பதற்கன்று. இப்போதுஅரசாங்கம் என்னென்ன செய்து வருகிறதோ அவை யனைத்தும் நாட்டின் நலத்துக்காகவேயாகும்" என்று கூறினர்.

ஆமாம் மக்களுக்குச் சர்க்கரையும் வெல்லமும் எதற்காக? வர்த்தக இனம் நன்மையடையும் வழியில் அப்பொருள்களை விற்றுவிட்டுப் போகட்டுமே என்பது தாண்டன்கருத்துப்போலும். அரசாங்கம் செய்வதெல்லாம்நாட்டுநன்மைக்கே என்றால், சணல் வர்த்தக ஊழலில் 48 கோடி ரூபாய் நஷ்டப்பட்டது கூட நாட்டு நன்மைக்குரிய செயல் தானா என்று கேட்டுவிடாதீர்கள். எது நேர்ந்தாலும் அதுவும் ஒரு நன்மைக்கே என்று மனதிற் திடப்படுத்திக்கொண்டுபோகும் நம்பிக்கையுடையவர் தாண்டன். ஆகையால், அந்தக் கருத்தில்தான் கூறியிருப்பார். அரசாங்கம் செய்வதெல்லாம் நாட்டு நலனுக்குரியவை என்று. பாவம் அவர் தலைவராக வந்துவிட்டாரே ஏதாவது கூறி வைக்க வேண்டாமா அப்பதவியின் பெருமையை முன்னிட்டாவது?

மாலை மணி

சென்னை 14—12—50 வியாழக்கிழமை

இனியேனும் :: அறிவு வருமா?

நம் நாட்டிலே ஒரு சிறு கூட்டம் மத நம்பிக்கையை வாணிகப் பொருளாக வைத்துக் கொண்டு, மக்களை ஏமாற்றி அடிமைகளாகவே ஆக்கிவைத்திருக்கும் வேலையைப் பன்னெடுங்காலமாகவே செய்துகொண்டு வருகிறது. அக்கூட்டத்தினுடைய சூழ்ச்சியும் சதியும் அன்று முதல் இன்று வரை மதப் போர்வையால் மறைக்கப்பட்டு, மக்களின் பாமரத் தன்மையால் காக்கப்பட்டு வருகின்றது.

இன்றும் கூட, நம் நாட்டிலே, தெய்விக மருந்துகள் தெய்விக மூலிகைகள், விபூதி வரப்பிரசாதங்கள் ஆங்காங்கு கிளம்பிய வண்ணமே இருக்கின்றன. இவற்றை விரிவாக விளம்பரப்படுத்தும் வேலையைச் சில பத்திரிகைகள் தம் முதற் கடமையாகக் கொண்டிருக்கின்றன. பத்திரிகைக்காரர்கள் மக்களுக்கு உண்மைகளை எடுத்து விளக்கவேண்டிய பொறுப்பை மறந்து இத்தகைய தெய்விக மோசடிகளை மக்களிடைப் பரப்பி வருவதை முக்கிய வேலையாகக் கொண்டிருக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் ஓரிஸாவில் ஆடு மேய்க்கும் ஓர் "அற்புதச்" சிறுவன் அதிசய மூலிகை அளிப்பதாகவும், அதுவல்லா வகையான பிணிகளையும் போக்குவதாகவும், பத்திரிகைக்காரர்கள் பிரமாதமாக வெளிப்படுத்தினர். அந்த மூலிகையைப் பெற ஆயிரக்கணக்கான மக்கள் விரைந்தோடுவதாகவும், விசேஷ ரயில் வண்டிகள்விட வேண்டிவந்துவிட்டதென்றும் ஓரிசா அரசாங்கம் தெரிவிப்பதாகவும் செய்திகள் வந்தன.

செங்பேல் பாபா என்னும் 12 வயதான அச் சிறுவனைப் பார்க்கப் போகும் மக்கள் பற்றி ஓரிசா சட்டசபையில் கேள்வி கேட்கப்பட்டபோது, தினந்தோறும் 20 விசேஷ பஸ்கள் விடப்படுவதாகவும் 15,000 மக்கள் அச் சிறுவனைத் தரிசிப்பதாகவும் பிரதம மந்திரி தெரிவித்தார்.

இதற்குப் பிறகு திருச்சிக் கருகே ஓர் அதிசயம் கிளம்பியது. குமாரமங்கலம் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் விபூதிப் பிரசாதம் கொடுத்துத்திராத நோய்களைத் தீர்க்கிறார் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது. க்ஷயரோகம், குஷ்டரோகம், கர்ம வியாதிகள் முதலியவை இந்த அதிசயப் பிரசாதத்தால் சுகமாகிவிடுகின்றனவாம்.

இவ்வாறு பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன. பொது மக்கள் பெரும்பாலோர் பன்னெடுங்காலமாகத் தெய்விகத்துக்கு அறிவைப் பலி கொடுத்து விட்டவர்களாகவே இருப்பதால், இக் கதைகளை நம்பி அதிசய மூலிகைகளையும் பிரசாதங்களையும் பெறுவதற்காக ஆயிரக் கணக்கில் செல்வதுமுண்டு. சிலர் இந்த அதிசய மூலிகைகளை விளம்பரப்படுத்தி விற்பனை செய்வதையும் பத்திரிகைகளில் மக்கள் படித்திருப்பார்கள். அந்த விளம்பரம் செய்பவர்கள் தாங்கள் வைத்தியர்களல்லவென்றும் இமாலய மகான்களால் அருளப்பெற்றுத் தாங்கள் சுகமடைந்து அனுபவித்த பிறகே அம் மூலிகை மருந்தை வெளியிடுவதாகவும் அதற்கு வாங்கும் கட்டணம் குரு தட்சணை என்றும் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகச் செய்யப்பட்ட விளம்பரங்களை மக்கள் படித்து ஏமாந்தவர்களும் ஏமாறுதவர்களும் பலர் இருப்பர்.

இப்படி அதிசய மூலிகைகளும், அற்புதப் பிரசாதங்களும் உண்மையில் எல்லா நோய்களையும் போக்கும் என்றால், நாட்டிலே ஆஸ்பத்திரிகள் டாக்டர்கள் ஏன்? ஒரு விபூதிப் பிரசாதப் பேர்வழியை ஆஸ்பத்திரிகளிடத்தில் உட்கார வைத்து ஓராண்டு தினம் தவறாமல் மருந்து கொடுக்கச் செய்தால் நாட்டிலே குஷ்டரோகிகள், க்ஷயரோகிகள், பிறரோகிகள் முதலியவை ஒன்றுமே இராதே. அரசாங்கத்தாருக்கும், வைத்தியக் கல்லூரி நிர்வாகம், ஆஸ்பத்திரி நிர்வாகம் முதலியவற்றிர்க்காகும் பெரும் பணம் மிச்சமாகி விடுமே இதை ஏன் அரசாங்கம் கவனிக்கவில்லை!

பொது மக்களுட் பலர் இவற்றை யெல்லாம் சிந்திப்பதில்லை. அவர்கள் எதையும் நம்புமாறு பழக்கப்பட்டிருப்பதால் நம்பி விடுகின்றனர். ஆனால் அரசாங்கம் இதற்காக என்ன செய்தது? பொது மக்கள் ஏமாற்றப் படுவதைத் தடைசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? இவ்வாறு மக்களை ஏய்க்கும் செய்திகளை விளம்பரப்படுத்தும் போக்கற்ற பத்திரிகைகள் விஷயத்தில் அரசாங்கம் என்ன கவனம் செலுத்தியது!

இவை ஏமாற்று மோசடி, மக்கள் அறிவைப் பாழ்படுத்தும் வஞ்சகம் என்று நாம் பன் முறையும் எடுத்துக் காட்டியும் மக்களை அறிவீனர்களாக்கிவைத்திருப்பதில் அக்கறைகொண்ட கூட்டத்தார் இத்தகைய செய்திகளை நாடெங்கும் பரப்புவதிலும் இவற்றுக்கு ஆதரவு தருவதிலும் பேரக்கரை காட்டி வருகின்றனர்.

இவை மோசடி என்பதை நாம் மட்டும் கூறுவதாகக் கருதிவிட வேண்டாம். பிரபல விஞ்ஞானி சர். சி. வி. இராமன் "இவ்விஷயம் முழுவதும் ஒரே மோசடியாகும். மக்களின் வெறியே அங்கு ஏராளமாகச் செய்வதற்குரிய காரணமாகும். பரஸ்பரம் பலனடையும் ஒரு குழுவினர் செய்யும் வேலையே இது. இந்தக் காரியங்களைச் செய்பவர்கள் பல்வேறு வழிகளில் பணம் திரட்டுகின்றனர். மக்களின் அறியாமையையும் நெஞ்சுறுதியின்மையையும் பயன்படுத்தி அவர்கள் புது வகை வாணிபம் செய்கின்றார்கள். காலதாமதமின்றி இந்த மோசடிக்கு முடிவுகட்ட அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அறிக்கை விட்டிருக்கின்றார்.

இந்த அறிக்கை அதிகாரிகளின் கண்களைத் திறக்குமா? மக்களை மடத்தனத்தில் ஆழ்த்த முயலும் சூழ்ச்சிக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்க அரசாங்கம் முன் வரவேண்டும். அதற்கு அரசாங்கத்திலிருப்பவர்கள், இத்தகைய மயக்கத்திற்குள்ளாகும் நிலையற்றவர்களாக, அறிவுத் தெளிவுடையவர்களாக இருக்க வேண்டும்! அங்ஙனமில்லா நிலையில் நாடு உருப்படமுடியுமா?

சர்க்காரின் சந்ததியா?

பள்ளியிலேயும் கருத்துரிமை பறிக்கப்படுகிறது

பார்ப்பன ஆசிரியர் ஆட்சி

செஞ்சி, டிச. 12—

இவ்வூர் உயர்நிலைப் பள்ளியில் நான்காம் படிவ மாணவர் கூட்டத்தில் "நூல் நிலையம்" என்னும் பொருள் பற்றி கந்தசாமி என்னும் மாணவர் நூல் நிலையங்களில் மாணவர் மனதைக் கெடுக்கும் நூல்களும், அறிவுக்கொவ்வாத நூல்களும், மடமையை வளர்க்கும் நூல்களையும், நூல் நிலையத்தில் வைக்கக் கூடாது. சிந்தனையைக் கிளறும், அண்ணாவின் புத்தகங்களை வைக்கலாமென பேசினார்.

அம்மாணவரின் சொற்பொழிவானது பார்ப்பன ஆசிரியருக்கு மருட்சியை உண்டுபண்ணியது போலும்! உருண்டார், மிரண்டார். வஞ்சக அம்பை எய்ய முயற்சித்து விட்டார். சாயம் பூசிய நரியைப் போன்று வீரம் பேசுகிறார். சவால் விடுகிறார். அதற்குத் துணையாக தலைமை பார்ப்பன ஆசிரியரும் அம் மாணவர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சித்துவிட்டார். நடத்தட்டும் வீரன் தூங்கும் வரையில்தானே, கோழையின் கொக்கரிப்பு! ஆனால் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்த்து, நேர்மையாக நடந்துகொண்டால் தான் அவர்களின் நிலை புகழ்ச்சிக்குறியதாகும். இல்லையேல் நீலனின் சிலைக்குப் பக்கத்திலேதான் அவர்கள் போக்கின் வரலாறு குறிப்பிட்டு பதிக்கப்படும் என்பதை நினைத்துக்கொள்ளட்டும்.

ஸிரியாவுக்கு சணல் இந்தியா சப்ளை செய்யும்

டமாஸ்கஸ், டிச. 13—

ஸிரியாவுக்கான சணல் தேவைகளை இந்தியா பூர்த்திசெய்யும் என்றும் இவைகளை அனுப்புவதில் முதல் சலுகைகாட்டும் என்றும் டில்லியிலுள்ள ஸிரிய ஸ்தானிகரிடமிருந்து இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

சி. என். அண்ணாத்துரை

எதிர்பாராத வேலை நெருக்கடி காரணமாக 17, 18, 19 தேதிகளில் முறையே திருச்செங்கோடு, பவானி, காங்கயம் ஆகிய ஊர்களில் ஏற்பாடாகி இருந்த கூட்டங்களுக்குப் போக முடியவில்லை. ஜனவரி திங்களில் மேற்படி ஊர்களுக்கு சி. என். அண்ணாத்துரை அவர்கள் வருவதாகத் தெரிவித்திருக்கிறார்.

சென்னைக்கு ஒலிபெருக்கி

மகிழ்ச்சிக்குரிய செய்தி

சென்னை நிர்வாகக் கமிட்டியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள் சென்னையில் 2 நாடகங்கள் நடத்தி, உதவிய பணத்தைக் கொண்டு பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும் தோழர் கே. ஆர். ஆர்., மற்றும் பலரும் பல ஒலிபெருக்கிக் கம்பெனிகளுக்குச் சென்று பார்த்து அண்ணா அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஒலிபெருக்கி ஒன்றை வாங்கிவிட்டேன். என்பதை மகிழ்ச்சி உடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கே. கோவிந்தசாமி

செயலாளர் சென்னை.

கழகக் காளையர் முழக்கம்

(o)

திருவாரூரில் தி. மு. கழக ஆண்டு விழா

(0)

பதினாயிரக்கணக்கில் மக்கள் வெள்ளம்

10—12—50 மாலை 5 மணிக்கு திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழக ஆண்டு விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. தஞ்சை, மாயூரம், குடந்தை, திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, நாகை ஆகிய பல பகுதிகளிலுமிருந்தும் ஏராளமான தோழர்கள் வருகை தந்தனர். ஆண்டு விழா நடந்த அழகிரிசாமி மேடை இதுவரை எந்த மேடையும் அமைக்கப்படாத அத்தனை அலங்காரத்துடன் அமைக்கப்பட்டிருந்தது. துணியால் அமைக்கப்பட்ட அழகிய கூடாரமும் ஒளிவிடும் மின்சார விளக்குகளும், பட்டொளி வீசிடும் கொடிகளும், அறிஞர் அண்ணாவின் உருவப்படமும் மேடையை பெருமையுறச் செய்தன.

தோழர் கருணை ஜமால் பிரரேபிக்க தோழர் நாகப்பன் தலைமை தாங்கினார். தோழர்கள் நாகூர் ஹனீபா, கே. ஆர். செல்லமுத்து ஆகியோர் இயக்கப்பாடல்கள் பாடினார்.

கண்ணதாசன்

இலக்கியம், கலை ஆகிய துறைகளில் நமக்கு முற்பட்ட பல்லோர் பேரறிஞர்கள் புரட்சி பல செய்திருப்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி சொற்பொழிவாற்றினார்.

அரங்கண்ணல்

வெளிநாட்டு நிலைகளை விளக்கியும், திராவிடம் வடநாட்டிலிருந்து ஏன் பிரியவேண்டுமென்பதற்கு சரித்திரச் சான்றுகள் காட்டியும் அரிய விரிவுரையாற்றினார்.

என். எஸ். இளங்கோ

கம்யூனல் ஜி. ஓ. திராவிட சமுதாயத்திற்கு எவ்வளவு தேவையானது என்பதையும், திராவிட இயக்கத்தை அழிக்கக் கனவுகாணும் சில்லறைகளைப் பற்றியும், வடநாட்டு அகதிகளுக்கு தென்னாடு செய்துதரும் வசதிகளும் அதே நேரத்தில் தென்னாட்டின் வறுமை நிலையையும் குறிப்பிட்டு விளக்கவுரையாற்றினார்.

மு. கருணாநிதி

அறிஞர் அண்ணாவின் மீது 'ஆரியமாயை' வழக்கு நடத்தி அபராதம் கட்டத் தவறினால் சிறைச்சாலை என்று ஆறு மாதம் தண்டனை விதித்து பிறகு பத்துநாளில் விடுதலைசெய்து இப்போது அவர் சொத்தை ஜப்தி செய்திருக்கிற சர்க்காரின் விசித்திரப் போக்கைக் கண்டித்து அண்ணா சிறையிலிருந்த பத்து நாட்களுக்கும் சர்க்கார் என்ன பதில் சொல்லுகிறது. எனக் கேட்டு சொற்பெருக்காற்றினார்.

சி. பி. சிற்றரசு

புத்தகம் எழுதினால் நீயும் எழுதி-நாடகம் நடத்தினால் நீயும் ... தடைபோட்டு உன் தகுதியைக் காண்பித்துக் கொள்ளாதே என்று சர்க்காருக்கு அறிவித்து-நாடகம் நடத்தியே ஒரு கட்சி வளருகிறது என்றால் அது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்பதை விளக்கி-கேலியும்-ஆத்திரமும் தெறிக்க வீரவுரையாற்றினார்.

5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட கூட்டம் இரவு 10-15 மணிக்கு முடிவுற்று சுமார் 5¼ மணி நேரம் பதினாயிரக்கணக்கான மக்களுடன் சிறியதொரு மாநாடு போல சீரும் சிறப்புடனே நடைபெற்றது. தோழர் டாக்டர் விசயராகவன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

அன்று மாலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகம் தோழர் சிற்றரசு அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

காங்கிரஸ் உறுப்பினர் ஆட்சேபணை

செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுக்கவும்,

மாயவரம், டிச. 10-இத்தொகுதியில், தஞ்சை ஜில்லா போர்டு தேர்தலில் வெற்றி பெற்றவரும், திராவிட முன்னேற்ற கழக ஆதரவாளருமாகிய தோழர் பி. வெங்கடகிருஷ்ணன் தேர்தல் நியமனம் சரியல்லவென்று, போட்டியுற்று தோல்வியடைந்தவரும், நகர காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான தோழர் ஏ. எம். இஸ்மாயில் செய்துகொண்ட ஆட்சேபனை மனுவை, 20—11—50ல் தஞ்சை சப்ஜட்ஜ் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

வளருகிறது !

தாத்தையங்கார் பேட்டை, டிச. 9-

நேதாஜி வாலிபர் சங்க முன்னாள் தலைவரும் சோஷலிஸ்ட் வாலிபர் சங்க பெம்பருமாகிய தோழர் மு. அங்கப்பன் அவர்கள் தற்போது நாட்டுக்கு பாடுபட்டு அடக்கு முறையை எதிர்த்து பேச்சுரிமையை நிலை நாட்டி மக்களின் உண்மை விடுதலைக்கு பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராய் பதிவு செய்து கொண்டார். அவரின் பதிவு நெம்பர் 47639 என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தோழர்களுக்கு !

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும். ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளு...

பச்சைக்குழந்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லையே" என்றுபரிதாபகரமாகத் தெரிவித்தார்.

இது போன்ற நிகழ்ச்சிகள் பல நாட்டில் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. நாட்டாட்சி புரிவோர் இவ்வறுமைக்கொடுமையைக்களைய என்ன ஏற்பாடுகளைச் செய்கின்றனர் என்பதைப் பொது மக்கள் தாம் அறியவேண்டும்.

நல்ல வேலைத்திட்டங்களும் பொது நலமும் இல்லாத முறையில் ஆட்சியாளர்கள் நாட்டை ஆள்வதென்றால், நாளுக்கு நாள் பிற்போக்கில்தான்போய்க்கொண்டிருக்கும்.

வட அரசாங்கத்திடம் மயிலே மயிலே இறகு கொடு' எனும் முறையைச் சென்னையரசாங்கம் கையாளுவதில் பயனில்லை. நாட்டிலே மக்கள் பட்டினியால் துடிதுடித்துச்சாகவிட, ஆட்சி எனும் பேரால் ஒன்று நடைபெறுவதில் பொருள் என்னவிருக்கிறது, என்ற எண்ணம் மக்கள் மனத்தில் தோன்றிவிடலாம். சட்டசபையில் ஓரங்கத்தினர் குறிப்பிட்டதுபோல பட்டினிப்படை கோபப்படையாக மாறுதபடி நாட்டு நிலைமையைச் சரிப்படுத்த வேண்டுமானால், சென்னை அரசாங்கம், பர்மா, சயாம், இந்தோ சீனா, எகிப்து முதலிய இடங்களில் இவ்வாண்டு அதிக அரிசி விளைச்சல் இருக்கிறதெனத் தெரிவதால் அந்நாடுகளிலிருந்து வரவழைக்க உடனடியாக முயலுதல், வேண்டும். நாம் பட்டினி கிடந்து சாகும்போது, அடுத்தவீட்டுக்காரனிடம் ஆரூடம் கேட்கும் நிலையைச் சென்னை அரசாங்கம் கைவிட்டாலன்றிப் பஞ்ச நிலைமையைச் சமாளிக்க முடியாது.

உணவு மந்திரிகள் மாநாட்டில் கிராம ரேஷன் ஒழிப்புப்பற்றிய ஆலோசனைக் குழுவில் சென்னை பிரதிநிதித்துவம்அளிக்கப்படாததிலிருந்தே வட நாட்டு அரசுகள் சென்னையை எங்ஙனம் மதிக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்நிலையில் வட அரசுகளோ, மத்திய அரசாங்கமோ, நம் நிலை கண்டு இரங்கி உதவி செய்ய வேண்டும், என்று கருதுவதும் அவர்களை வேண்டுவதும் பயன்தருமெனக் கருத முடியவில்லை.

காசி சர்வகலாசாலை பிரவேசத் தேர்வு

சென்னை சர்க்கார் அங்கீகரிக்கும்

சென்னை, டிச. 13—

சர்க்கார் சபார்டினேட் சர்வீஸில் வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு குறைந்தபட்ச கல்வி யோக்யதாம்சம் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீக்ஷை பாஸ் செய்திருக்கவேண்டும். காசி சர்வகலாசாலை பிரவேச பரீக்ஷை பாஸ் செய்தவர்கள்கூட எஸ். எஸ் எல். ஸி. பாஸ் செய்ததற்கு ஈடாக மதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான சர்வீஸ் கமிஷனனின் யோசனையை ஏற்று கவர்னர் உத்திரவு

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

15—12—50

கண்டவராயன்பட்டி (தேவகோட்டை)

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

16—12—50

சோக்கனுதபுரம் (மானாமதுரை)

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன், குடந்தை எஸ். கே. சாமி, என் எஸ். இளங்கோ.

17—12—50

சென்னை (ராபின்சன் பார்க்)

தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. ராமசாமி, பி. வி. முத்துசாமி.

திருச்செங்கோடு

தோழர்கள் என். கே. பி. வேல், ஈ. வி. கே. சம்பத்.

கீழச்சந்தைப்பேட்டை, (மதுரை)

தோழர்கள் எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், எஸ். முத்து, எஸ். சி.மாணிக்கம், எம். அய்யாச்சாமி.

ஆர்க்காடு

தோழர் சி. பி. சிற்றரசு.

திருச்சி

தோழர்கள் என். எஸ். இளங்கோ, எஸ். எஸ். மணி, எஸ். கே. சாமி, மு. கருணாநிதி.

வளவனூர்

தோழர்கள் என். எஸ். இளங்கோ, மா. இளஞ்செழியன்.

18—12—50

சின்ன சேலம்

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈரோடு அப்பாவு.

தென்துருவப் பிரதேசத்தில் கறிகாய் பயிரிடலாம் !

நியூயார்க், டிச. 13—

தென் துருவத்தைச் சேர்ந்த எண்டார்டிக் பிரதேசத்தில் பூமிக்குள் சில உஷ்ணப் பிரதேசங்கள் இருக்கின்றனவென்பதை விஞ்ஞானிகளும் எஞ்ஜினியர்களும் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இதை நன்கு பயன்படுத்தி அப்பிரதேசத்தில் மக்கள் குடியேறச் செய்ய முடியுமா என்கிற விஷயமாக இவர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் சில உலோகப் பொருள்கள் முக்யமாக உரேனியம் கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது.

சூரிய உஷ்ணத்திலிருந்தும் காற்று மில்களைக்கொண்டும் மின்சார உற்பத்தியை ஏற்படுத்த இவர்கள் திட்டம்போட்டு வருகின்றனர். குகைகளில் இந்த மின்சார வெளிச்சம்போட்டு பூமிக்குள் இருக்கும் உஷ்ணத்தைப் பயன்படுத்திக் கறிகாய் உற்பத்தி செய்யலாம் என்று

கழக நடவடிக்கைகள்

திண்டுக்கல்:—3-12-50 ல் தோழர் தங்கவேல் அவர்கள் தலைமையில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது கைத்தறி நெசவாளர் அவதியையும், உணவுப் பங்கீட்டின் குறைகளையும்; சர்க்கார் அடக்குமுறையைக் கண்டித்தும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

* * *

சங்கரநாயனார் கோவில்:—3-12-50 தி. மு. கழக பொதுக் கூட்டம் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ராஜேந்திரன், திராவிடமணி, எம். எஸ். இராமசாமி ஆகியவர்கள் ஆட்சியாளரின் அடக்குமுறை தர்பாரை விளக்கியும் வட நாட்டிற்கும் தென்னாட்டிற்கும் உள்ள வேற்றுமையை விளக்கியும் அதிகார மனைத்தையும் டெல்லி ஆட்சியிடம் ஒப்படைத்துவிட்டு எதற்கும் வடக்கே காவடி தூக்கும் சென்னை அரிசியலாரின் பரிதாப நிலையை விளக்கியும் விரிவான முறையில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஆச்சாரியார் வந்தபோது அமைதியான முறையில் கறுப்புக் கொடி காட்டிய தோழர்களை அடித்து துன்புறுத்திய செயலை கண்டித்தும், பேச்சுரிமைக் காக்க அறப்போர் துவக்கிய குன்றத்தூரில் துப்பாக்கி கொண்டு சுட்டு ராமராஜ்ய தர்பார் நடத்தியதை கண்டித்தும், பகிரங்க விசாரணை கோரியும், நாரணமங்கலத்தில் அண்மையில் கைது செய்துள்ள தோழர்களை விடுவிக்க வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

களப்பூர்:—4-12-50 தி. மு. கழக செயற்குழு கூடியது. புது ஆண்டிற்கு கீழ்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் ர. கணேசன்; துணைச் செயலாளர் எ. கோவிந்தசாமி; பொருளாளர் வி. செ. சின்னக்கண்ணு; விளம்பர உறுப்பினர் ச. மொ. அண்ணுமலை.

* * *

சேத்துப்பட்டு:—திராவிட முன்னேற்றக் கழகம் 5-11-50 ஞாயிறு காலை 10-மணிக்கு புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் கழக கட்டிடத்தில் தி. மு. கழக பொது அங்கத்தினர்கள் கூட்டம் செயலாளர் ஆ. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

தீர்மானம்:—இவ்வாண்டு தி. மு. கழகத்திற்கு கீழ்கண்டவர்களை நிர்வாக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் ஆ. சுப்பிரமணியம்; துணை செயலாளர் எ. செல்வராசன்; பொருளாளர் ம. பூ. சிவஞானம்; விளம்பர உறுப்பினர் த. சிங்காரம். நிர்வாக குழுவினர்கள் மு, கணேசன், வி. வாசுதேவன், எ. இரங்கநாதன், வே. இரங்கநாதன், ஆர். பி. சின்னப்பன். சென்னை மாவட்ட கழக உறுப்பினராகத் தோழர்கள் ஆ. சுப்பிரமணியம், த. சிங்காரம் இருவரையும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

* * *

வாட்டாகுடி:-5-12-50-ல் தி. மு. கழக கூட்டமும், தீர்மானமும்: தஞ்சை மாவட்ட மாநாடு கூடிய சீக்கிரத்தில் ஆரம்பிக்க பொதுச் செயலாளர் அண்ணு அவர்களைக் கேட்டுக்கொண்டும், தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் பிரச்சாரகுழுவினரை அழைப்புக்கொடுத்து கழக சார்பாகபொதுக்கூட்டமொன்று நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

* * *

தென்காசி:—6-12-50-ல் ஆ. திராவிடமணி தலைமையில் கூடி, நாட்டில் பட்டினிப் பஞ்சம் நடமாடுவதைப் பற்றியும், நூல் பஞ்சத்தால் நெசவாளர் படும் அவதியைக் கண்டு அவர்களுககு உடனே ஆவன செய்யவேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

தாத்தையங்கார்பேட்டை:-8-12-50 திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டம் எம். எஸ். என். இராசன் தலைமையில் கூடி, நாரணமங்கலம் பேச்சுரிமையைப் பறித்த சர்க்காரைக் கண்டித்தும், 3-12-50-ல் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவை அப்படியே பின்பற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

* * *

தூத்துக்குடி:—8-12-50-ல் நிர்வாகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்: வியோ ஜே. எம். டாஸ் செயலாளர்; டி. ஜோதிபாண்டியன் துணைச்செயலாளர்; கே. வேல்சாமி கூட்டு செயலாளர்; எம். ரத்தினம் விளம்பர உறுப்பினர்; வி. சுப்பையா பொருளாளர்.

* * *

மேலப்பழுவூர்:—8-12-50-ல் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் எம். ஆர். செல்லப்பா தலைமையில் கூடி, கழக கூட்டங்களுக்கு தடையுத்தரவு போடுவதையும், பேச்சுரிமை காக்க அறப்போர் செய்பவரை, கலவரம் செய்பவர்களென புனைந்து தண்டிக்கும் போக்கைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேறியது.

* * *

ஆம்பூர் (வ. ஆ.):—10-12-50-ல் எ. ஜி. சாமி தலைமையில் பழைய நிர்வாகஸ்தர்களை கலைத்து புது தேர்தல் நடைபெற்றது. அதில் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள்: எம். கண்ணன் செயலாளர்; கோ. அரசு துணைச்செயலாளர்; ஜ. பெ. கோவிந்தன் பொருள் உறுப்பினர்; எம். துரை விளம்பர உறுப்பினர்; ம. கோ. கதிர்வேல் துணை விளம்பர உறுப்பினர்.

இந்திய மைக்காவுக்கு கிராக்கியா?

லண்டன், டிச. 13—

யுத்தத்திற்கான அத்யாவசியமான பொருள்களில் ஒன்று 'மைகா' என்று தெரிகிறது. இதிலிருந்து இந்தியாவில் கிடைக்கும் இந்த மைகா (காகபொன்)வுக்கு ஏக கிராக்கி ஏற்படுமென்று தெரிகிறது. அமெரிக்காவுக்கு ஏராளமான மைகா தேவையாக இருக்கிறதாம்.

ரஷ்யாவில் சீன விமானிகளுக்கு பயிற்சி

லண்டன், டிச. 13—

சீன விமானிகளுக்கு ரஷ்யாவிலேயே பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக இங்கு கிடைத்துள்ள செய்தி ஒன்று கூறுகிறது. காபரோவ்ஸ்க் என்ற இடத்தில் ஒவ்வொரு 6 மாதத்திற்கும் சுமார் 500 சீன விமானிகள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள்.

'மாலை மணி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணு, தமிழ்ப்பெரியார் திரு. வி. க, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன், வியாழன், சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத், கா. அப்பாதுரை, சோமசுந்தர பாரதியார், அரங்கண்ணல், இராதாமணாளன், மற்றும் பிற அறிஞர்களின் அரிய கட்டுரை, கவிதைகளுடன் வெளிவருகிறது.

விலை அணு 4 தான்

வெளியூர்த் தோழர்கள் முன்னதாக ஏஜெண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும்.

விளம்பரம் செய்வோர், அலுவலக நிர்வாகிக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளவும்.

இனி நடப்பவை

கண்டை:—17-12-50ல் தி.மு.க. கிளைக் கழக செயற்குழு கூட்டம் தி. மு. கழகம் 167/எ அக்கிப்பேட்டை பெங்களூர் 2. முகவரியில், மாநாடு நடத்தவும், மாவட்ட கமிட்டி திறமையாக பணியாற்ற வழிவகுக்க விவாதிக்கப்படும். அனைவரும் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—17-12-50 ஞாயிறு காலை 9 மணிக்கு ஒட்டேரி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்க் கூட்டம் ரிக்லின்ரோட் 21-வது எண்ணுள்ள கழகக் கட்டடத்தில் நடைபெறும். அவ்வமயம் முக்கிய பல விஷயங்களைப்பற்றி அலோசிக்க இருப்பதால் அருள்கூர்ந்து அனைவரும் வருக.

* * *

சேலம்:—15-12-50 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை மேற்கு வட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெறுவதால் எல்லா நிர்வாக அங்கத்தினர்களும் தவருமல் வரவேணுமாய் கோறப்படுகிறது. இடம், லீபஜார். செயலாளர் மண்டியில்.

ஏழைகள் கண்ணே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திராமல் விரட்டவும் தண்டனை தரவும் ஏற்பாடு செய்யலாமே.

அதை விட்டு, இன்று ஊழல் பேர்வழிகள் பலர் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்க, நாட்டிலே வெளிப்படையாகக் கள்ளமார்க்கெட் பேர்வழிகள், ஊழல் பேர்வழிகள் எவரெனத் தெரியக் கூடிய நிலையிலிருந்தும், அவர்கள் தேசபக்தர்கள், தியாகிகள், பெரும் பணக்காரர்கள், மக்களிடமிருந்து சிபார்சுக் கடிதம் கொண்டுவருபவர்கள் என்றெல்லாம் தாக்ஷண்யம் பார்த்து விட்டுக்கொண்டிருப்பதும் பிறகு மேடையில் பேசுவதும், அறிக்கை விடுவதும் எவர் கண்களைத் துடைக்கவென்றும் பொது மக்கள் கேட்காமல் இருப்பார்களா?

அறிவிப்பு

தி. பே. மு. கழக அமைப்பு கூட்டம்

தி. பெ. மு. க. துவக்க விழாவை முன்னிட்டு ஷை கமிட்டிக் கூட்டம் ஒன்று நாளது 17—12—50 ஞாயிறன்று பகல் 1 மணிக்கு சேப்பாக்கம் அருணுசல ஆச்சாரி தெரு 13 எண் இல்ல மாடியில் நடைபெற இருப்பதால் கமிட்டி உறுப்பினர் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு, வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அலமேலு
அமைப்பாளர்
தி. பெ. மு. க.

சிற்றூர் விற்பனையாளர்

தமிழ் நாடு முழுமையிலும் உள்ள சிற்றூர்களுக்கு 'மாலைமணி' விற்பனையாளர் தேவை. அவர்கள் ரூபாய் பத்து முன்பணம் அனுப்பி வைத்தால் அவர்களுக்கு பத்து பிரதிகள் தினசரி அனுப்பி வைக்கப்படும். விற்பனை கழிவு 25% வீதம் அளிக்கப்படும். விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" அலுவலகம்
மண்ணடி—சென்னை.

சந்தா விவரம்

1. ஆண்டு	ரூ.	12—8—0
6. திங்கள்	ரூ.	7—0—0
3. திங்கள்	ரூ.	3—8—0

தனிப்பிரதி அரையணு. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty street, Madras-I